156

# 063/DD/18

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

## DEPARTMENTAL EXAMINATIONS

## DEPARTMENTAL TEST ON LAND LAWS AND OTHER RELIGIOUS ACTS FOR HINDU RELIGIOUS AND CHARITABLE ENDOWMENTS DEPARTMENT

(Without Books)

Maximum Time : 2 hours

Maximum Marks : 80

## *IMPORTANT INSTRUCTIONS*

## OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

**NB : Words of masculine gender in these instructions shall, where the context so require, be taken to include feminine gender.**

இந்த அறிவுறுத்தலில் ஆண் பாலினரின் வார்த்தைகளில், சூழலுக்கேற்ப தேவைப்படின் பெண் பாலினரின் வார்த்தைகளும் அடங்கும்.

**This booklet should not be opened till the Invigilator gives a signal to open it. As soon as the signal is received you should open the booklet and then proceed to answer the questions.**

இந்த வினாத்தொகுப்பினை கண்காணிப்பாளரின் அனுமதி பெறுவதற்கு முன்னர் திறக்கக்கூடாது. கண்காணிப்பாளர் வினாத்தொகுப்பினை திறப்பதற்கு அனுமதி அளித்தவுடன் வினாத்தொகுப்பினை திறந்து விடையளிக்க தொடங்கலாம்.

1. This question booklet contains 80 number of objective type questions. Prior to attempting to answer, the candidate is requested to check whether all questions are there and ensure that there are no blank pages in the question booklet. In case, if any defect is noticed in the question paper, it shall be reported to the Invigilator immediately, <u>within first 10 minutes</u> after which no request will be entertained.

   இவ்வினாத்தாள் 80 கொள்குறி வகை வினாக்களை கொண்டது. விண்ணப்பதாரர்கள் விடையளிக்க தொடங்கும் முன், வினாத்தாளில் எல்லா வினாக்களும் இடம் பெற்றுள்ளனவா என்பதையும், ஏதேனும் சில பக்கங்கள் / வினாக்கள் அச்சிடப்படாமல் விடுபட்டுள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். வினாத்தாளில் ஏதேனும் குறை இருப்பின் வினாத்தாளைப் பெற்ற பின் பத்து நிமிடங்களுக்குள் அறை கண்காணிப்பாளரிடம் தெரிவிக்க வேண்டும். அதற்கு பிறகு தெரிவிக்கப்படும் கோரிக்கைகள் ஏதும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

2. Answers all questions. All questions carry equal marks.

   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.

[Turn over

3. Candidate must write his Register Number in the space provided on the top right side of this booklet alone. Do not write anything else on the Question Booklet.
விண்ணப்பதாரரின் பதிவெண்ணை இவ்வினாத்தாளின் மேல் வலது பக்கத்தில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுத வேண்டும். வினாத்தாளில் வேறு எதையும் எழுதக் கூடாது.

4. The sheet before the last page of the question booklet shall be used for any rough work.
வினாத்தாளின் கடைசி பக்கத்திற்கு முன் பக்கத்தில் rough work எழுதி பார்க்க உபயோகித்துக் கொள்ளவும்.

5. (a) Each question comprises of four responses i.e. (A), (B), (C) and (D). Candidate shall select only one correct response. In case, if the candidate feels that there are more than one correct response, **shade the response which he considers is the best.**

(b) In any case, a candidate shall choose only one response for each question.

(c) **If more than one answer is shaded for a question, the answer will be treated as wrong and no mark will be given for that question.**

(d) The total marks will depend on the total number of correct responses marked in the OMR answer sheet. (For this purpose, only one shaded circle for a question will be taken into account for awarding mark)

(a) ஒவ்வொரு வினாவிற்கும் (A), (B), (C), (D) என நான்கு விடைகள் கொடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர் அவற்றில் ஏதேனும் ஒரு சரியான விடையைத் தேர்வு செய்ய வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு வினாவிற்கு இருப்பதாக கருதினால், **அவற்றில் எவ்விடை மிகச் சரியானது என கருதுகிறீர்களோ, அவ்விடையை நிழலிட்டு காட்ட வேண்டும்.**

(b) எவ்வாறிருப்பினும், ஒரு வினாவிற்கு ஒரே ஒரு விடையைத் தான் தேர்ந்தெடுக்க வேண்டும்.

(c) **ஒரு வினாவிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வட்டங்களில் விடையளிக்கப்பட்டிருந்தால் அவ்விடை தவறானதாக கருதப்பட்டு, அவ்வினாவிற்கு மதிப்பெண் வழங்கப்படமாட்டாது.**

(d) OMR விடைத் தாளில் குறிக்கப்பட்ட சரியான விடைகளைப் பொறுத்து, மொத்த மதிப்பெண்கள் வழங்கப்படும் (ஒரு வினாவிற்கு ஒரு வட்டத்தில் (குறிப்பிட்ட) நிழலிட்ட விடை மட்டுமே மதிப்பெண் வழங்க கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்).

6. Do not mark the answers in the Question Booklet.
வினாத்தாளில் விடைகளைக் குறிப்பிடக் கூடாது.

7. Candidate shall not remove or tear off any sheet from this question booklet. During the examination he is not allowed to take the question booklet out of the examination hall. Only after the examination is over, he shall be allowed to take the question booklet.
விண்ணப்பதாரர், வினாத்தாளின் எந்த ஒரு பக்கத்தையும், நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நடைபெறும் போது, வினாத்தாளை தேர்வு கூடத்தைவிட்டு வெளியே எடுத்து செல்ல அனுமதி கிடையாது. தேர்வு முடிந்த பின்னரே வினாத்தாளை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

8. Failure to comply with any of the above instructions will render you liable to such action or penalty as the Commission may decide.
மேற்கண்ட அறிவுரைகளில் ஏதேனும் மீறப்படுமேயானால் தேர்வாணையம் எடுக்கும் தண்டனை / நடவடிக்கைக்கு உள்ளாக நேரிடும்.

9. In case of doubt, English version is the final.
வினாக்களில் சந்தேகமிருப்பின், ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

1. Under Tamilnadu Patta Pass Book Act 1983 act, a person who has a right to enjoy the Land, during his lifetime shall be called

(A) Limited Owner (B) Full Owner

(C) Land Owner (D) Joint Owner

தமிழ்நாடு பட்டா பதிவு புத்தகச் சட்டம் - 1983 -ன் கீழ் ஒருவர் தன் வாழ்நாள் முழுவதும் நிலத்தை அனுபவிக்க மட்டுமே உரிமை உள்ளவர் இவ்வாறு அழைக்கப்படுவார்?

(A) வரையுடை உரிமையர் (B) முழுமையான உடைமையாளர்

(C) நில உடைமையாளர் (D) கூட்டு உடைமையாளர்

2. Under which section of Tamilnadu Patta Pass Book Act 1983, the Patta Pass Book can be issued

(A) Sec 3 (B) Sec 4

(C) Sec 5 (D) Sec 6

தமிழ்நாடு பட்டா பதிவு சட்டம் - 1983-ன் எந்த பிரிவின் படி பட்டாப் பதிவு புத்தகம் வழங்கலாம்

(A) பிரிவு 3 (B) பிரிவு 4

(C) பிரிவு 5 (D) பிரிவு 6

3. Which one of the following comes under 'Agriculture' in Tamilnadu Patta Pass Book Act 1983?

(A) Grass or Garden produce Land (B) Porampokku Land

(C) Government Land (D) Waste Land

தமிழ்நாடு பட்டா பதிவு புத்தகச் சட்டம் 1983ன் படி கீழ்கண்டவற்றில் ஒன்று வேளாண் நிலம் என்ற வரையறைக்குள் வருகிறது

(A) புல் அல்லது தோட்டப்பயிர் நிலம் (B) புறம்போக்கு நிலம்

(C) அரசு நிலம் (D) தரிசு நிலம்

4. According to Tamilnadu Patta Pass Book Act 1983, entries in the patta pass book to be the *Prima Facia* evidence shall be deemed in section

(A) Section-6 (B) Section-7

(C) Section-8 (D) Section-9

தமிழ்நாடு பட்டா பதிவு புத்தகச் சட்டம் 1983-ன் படி எந்த சட்டப்பிரிவு பட்டாப் பதிவுப்புத்தகத்தில் உள்ள பதிவுகள் முகநிலைச்சான்றாக கருதப்படும் என குறிப்பிடப்படுகிறது

(A) பிரிவு - 6 (B) பிரிவு - 7

(C) பிரிவு - 8 (D) பிரிவு - 9

5. Who shall issue the Patta Pass Book for house site?

(A) Tahsildar (B) Deputy Tahsildar

(C) District Collector (D) V.A.O

யாரால் வீட்டுமனைகளுக்கு பட்டாப்பதிவு புத்தகம் வழங்க முடியும்

(A) வட்டாச்சியர் (B) துணை வட்டாட்சியர்

(C) மாவட்ட ஆட்சியர் (D) கிராம நிர்வாக அலுவலர்

6. Under the Tamilnadu Patta Pass Book Act 1983, which section shall issue a Patta Pass Book for the house site?

(A) Section-20 (B) Section-21

(C) Section-22 (D) Section-23

தமிழ்நாடு பட்டா பதிவு சட்டம் - 1983-ன் படி எந்த சட்டப்பிரிவு வீட்டு மனைகளுக்கு பட்டாப்பதிவு புத்தகம் வழங்குவதை குறிப்பிடுகிறது

(A) பிரிவு - 20 (B) பிரிவு - 21

(C) பிரிவு - 22 (D) பிரிவு - 23

7. Under the act of Land Acquisition Act 1894, the collector has power to take possession, is deals under section

(A) Section-16 (B) Section-17

(C) Section-18 (D) Section-19

நில எடுப்புச்சட்டம் 1894-ன் எந்த சட்டப்பிரிவு மாவட்ட ஆட்சியருக்கு நிலத்தை கையகப்படுத்தும் அதிகாரம் வழங்குகிறது?

(A) பிரிவு - 16 (B) பிரிவு - 17

(C) பிரிவு - 18 (D) பிரிவு - 19

8. What does the section -51A says in Land Acquisition act 1894?

(A) Acceptance of certified copy as evidence

(B) Acquisition of the part of house or building

(C) Appeal

(D) Power to make Rules

நில எடுப்புச்சட்டம் 1894-ன் சட்டப்பிரிவு 51(A) எதைப் பற்றி கூறுகிறது

(A) சான்றிதலின் நகலை சான்றாக ஏற்றல்

(B) வீடு அல்லது கட்டிடத்தின் பகுதியை கையகப்படுத்துதல்

(C) மேல்முறையீடு

(D) விதிகள் இயற்றும் அதிகாரம்

9. According to the Land Acquisition act 1894, What is the Punishment given by a magistrate for obstructing acquisition of Land

(A) Imprisonment not exceeding 1 month or fine not exceeding Rs. 500/-or both

(B) Imprisonment not exceeding 3 months or fine not exceeding Rs. 1,000/- or both

(C) Imprisonment not exceeding 1 year or fine not exceeding Rs. 10,000/- or both

(D) Imprisonment not exceeding 120 days or fine not exceeding Rs. 1,000/-or both

நில எடுப்புச் சட்டம் - 1894 -ன் படி நிலத்தை கையகப்படுத்தும் பொழுது தடைசெய்தால் குற்றவியல் நீதிபதியால் என்ன தண்டனை விதிக்கப்படுகிறது

(A) சிறைதண்டனை ஒரு மாதத்திற்கு மிகாமல் அல்லது தண்டம் ரூபாய் - 500க்கு மிகாமல் அல்லது இரண்டும்

(B) சிறைதண்டனை மூன்று மாதத்திற்கு மிகாமல் அல்லது தண்டம் ரூபாய் - 1000க்கு மிகாமல் அல்லது இரண்டும்

(C) சிறைதண்டனை ஒரு வருடத்திற்கு மிகாமலும் அல்லது தண்டம் ரூபாய் - 10,000க்கு மிகாமல் அல்லது இரண்டும்

(D) சிறைதண்டனை 120 நாட்களுக்கு மிகாமல் அல்லது தண்டம் ரூபாய் - 1000க்கு மிகாமல் அல்லது இரண்டும்

10. The punishment for Obstructing Acquisition of land by magistrate under land acquisition act 1894 is dealt under section

(A) Section-46 (B) Section-45

(C) Section-44 (D) Section-43

எந்தப்பிரிவின் படி நில எடுப்பு சட்டம் 1894 கீழ் நில எடுப்பினை தடை செய்யும் பொழுது குற்றவியல் நீதிபதி தண்டனை வழங்க முடியும்

(A) பிரிவு - 46 (B) பிரிவு - 45

(C) பிரிவு - 44 (D) பிரிவு - 43

11. Enquiry and award by collector under land acquisition act 1894 is dealt under section

(A) Section-11 (B) Section-11A

(C) Section-12 (D) Section-13

நில எடுப்புச்சட்டம் 1894-ன் படி மாவட்ட ஆட்சியரின் விசாரனை மற்றும் தீர்வும் பற்றி எந்த சட்டப்பிரிவு குறிப்பிடுகிறது

(A) பிரிவு - 11 (B) பிரிவு - 11A

(C) பிரிவு - 12 (D) பிரிவு - 13

12. When does the government has the power to call for record to satisfy itself under land acquisition act 1894?

(A) Before the award made by the Collector

(B) After the award made by the Collector

(C) Within 30 days from the date of award made

(D) Within 60 days from date of award made

நில எடுப்புச்சட்டம் 1894-ன் படி எப்போது அரசுதான் விரும்பும் போது பதிவுறுகளை அழைக்கும் அதிகாரம் பெற்றிருக்கிறது

(A) மாவட்ட ஆட்சியரால் தீர்வு வழங்குவதற்கு முன்னர்

(B) மாவட்ட ஆட்சியரால் தீர்வு வழங்குவதற்கு பின்னர்

(C) தீர்வு வழங்கிய தேதியிலிருந்து 30 நாட்களுக்குள்

(D) தீர்வு வழங்கிய தேதியிலிருந்து 60 நாட்களுக்குள்

13. Under land acquisition act 1894, which section — the Government has the power to call for records?

(A) Section-15 (B) Section-15A

(C) Section-16 (D) Section-17

நில எடுப்புச் சட்டம் 1894-ன் படி எந்தச்சட்டப் பிரிவு அரசு பதிவுருக்களை வரவழைப்பதற்கு அதிகாரம் அளிக்கிறது

(A) பிரிவு - 15 (B) பிரிவு - 15A

(C) பிரிவு - 16 (D) பிரிவு - 17

14. What does the Section- 12 of land acquisition act 1894 says?

(A) Power to call for records

(B) Award of Collector when to be final

(C) Power to take possession of land

(D) Special Powers

நில எடுப்புச்சட்டம் 1894-ன் சட்டப்பிரிவு 12 எதைப்பற்றிக் கூறுகிறது

(A) பதிவுகளை வரவழைத்தல்

(B) மாவட்ட ஆட்சியரின் தீர்ப்பு எப்பொழுது இறுதியானது

(C) நிலத்தின் சுவாதீனத்தை எடுக்கும் அதிகாரம்

(D) சிறப்பு அதிகாரங்கள்

15. When can be the restitution of Conjugal rights ordered?

(A) Treating as slave

(B) Husband's family members manipulating

(C) If, there is no reason for Separation

(D) Sexual Harassment

எப்பொழுது மணவாழ்வுரிமை மீட்டளிப்பு உத்தரவு வழங்க முடியும்

(A) அடிமைப்போல நடத்துதல்

(B) கணவரின் குடும்ப உறுப்பினர்களின் கட்டுப்பாடு

(C) பிரிந்துறைவதற்கு எவ்வித காரணமும் இல்லாதிருத்தல்

(D) பாலியல் தொந்தரவு செய்தல்

16. Under what section of Hindu Marriage Act 1955, the restitution of Conjugal rights can be ordered

(A) Section-9 (B) Section-12

(C) Section-13 (D) Section-10

இந்து திருமணச்சட்டம் 1955-ன் படி எந்த சட்டப்பிரிவின் படி மணவாழ்வுரிமை மீட்டளிப்பு உத்தரவு வழங்கப்படுகிறது?

(A) பிரிவு - 9 (B) பிரிவு - 12

(C) பிரிவு - 13 (D) பிரிவு - 10

17. According to Hindu Marriage Act 1955, the registration of Hindu Marriages is dealt under section?

(A) Section-8 (B) Section-9

(C) Section-10 (D) Section-11

இந்துத்திருமணச் சட்டம் 1955-ன் படி எந்தச்சட்டப்பிரிவு திருமணப்பதிவு பற்றி குறிப்பிடுகிறது

(A) பிரிவு - 8 (B) பிரிவு - 9

(C) பிரிவு - 10 (D) பிரிவு - 11

18. Who can get the maintenance from her husband under Hindu Marriage Act 1955?

(A) Hindu Wife

(B) Working Wife

(C) Women got married for second time

(D) Non-Hindu Wife

இந்துத்திருமணச் சட்டம் 1955-ன் படி கீழ்க்கண்டயாரால் கணவனிடமிருந்து வாழ்க்கை பொருளுதவி பெற முடியும்

(A) இந்து மனைவி

(B) உழைக்கும் மனைவி

(C) மனைவி இரண்டாவது திருமணம் செய்யும் பொழுது

(D) இந்து அல்லாத மனைவி

19. According to Hindu Marriage Act 1955, what section deals with Judicial Separation

(A) Section-9 (B) Section-10

(C) Section-11 (D) Section-12

இந்துத்திருமணச்சட்டம் 1955-ன் படி எந்த சட்டப்பிரிவு நிதிவழிப் பிரிந்துறைதல் பற்றி குறிப்பிடுகிறது

(A) பிரிவு - 9 (B) பிரிவு - 10

(C) பிரிவு - 11 (D) பிரிவு - 12

20. What does the section-11 defines in Hindu Marriage Act 1955?

(A) Judicial Separation (B) Restitution of Conjugal rights

(C) Void Marriage (D) Voidable Marriage

இந்துத்திருமணச்சட்டம் 1955-ன் பிரிவு 11 எதைப்பற்றி கூறுகிறது

(A) நீதிவழிப்பிரிந்துறைதல் (B) மணவாழ்வுரிமை மீட்டளிப்பு

(C) இல்லாநிலைத் திருமணம் (D) தவிர்தகுநிலை திருமணம்

21. Custody of children is dealt under section in Hindu Marriage Act 1955 is

(A) Section- 25 (B) Section- 26

(C) Section- 27 (D) Section- 28-A

இந்துத்திருமணச் சட்டம் 1955-ன் எந்தப்பிரிவு குழந்தைகளின் பாதுகாப்பு பற்றி குறிப்பிடுகிறது

(A) பிரிவு - 25 (B) பிரிவு - 26

(C) பிரிவு - 27 (D) பிரிவு - 28 - A

22. What does the section-13-B of Hindu Marriage Act 1955 says?

(A) Divorce (B) Divorce by Judicial Proceedings

(C) Divorce by Mutual Consent (D) Divorce by cruelty

இந்துத் திருமணச் சட்டம் 1955-ன் பிரிவு 13 - B எதைப்பற்றி கூறுகிறது

(A) மணமுறிவு (B) நீதிமன்ற நடவடிக்கையால் மணமுறிவு

(C) ஒத்திசைவால் மணமுறிவு (D) கொடுமைப்படுத்துவதால் மணமுறிவு

23. What does the section-21C of Hindu Marriage Act 1955 says?

(A) Decree of Proceedings (B) Punishment of Bigamy

(C) Documentary Evidence (D) Divorce by Mutual Consent

இந்து திருமணச் சட்டம் 1955-ன் பிரிவு 21C எதைப்பற்றி கூறுகிறது?

(A) நடைமுறைகளில் தீர்ப்பானை (B) இருதார மணத்திற்கு தண்டனை

(C) ஆவணச்சான்று (D) ஒத்திசைவால் மணமுறிவு

24. Under which section, the Record Officer comes in Tamilnadu Agricultural Land Record of Tenancy Rights Act 1969?

(A) Section-2(7) (B) Section-2(8)

(C) Section-2(6) (D) Section-2(5)

தமிழ்நாடு வேளாண் நிலங்கள் குத்தகை உரிமைகள் பதிவுரு சட்டம் 1969-ன் படி பதிவுறு அலுவலர் பற்றி எந்த சட்டப்பிரிவு குறிப்பிடுகிறது

(A) பிரிவு - 2(7) (B) பிரிவு - 2(8)

(C) பிரிவு - 2(6) (D) பிரிவு - 2(5)

25. Under which section, the Government has power to make rules under Tamilnadu Agricultural Land Record of Tenancy Rights Act 1969?

(A) Section-18 (B) Section-19

(C) Section-20 (D). Section-21

தமிழ்நாடு வேளாண் நிலங்கள் குத்தகை உரிமைகள் பதிவுரு சட்டம் - 1969ன் படி அரசு விதிகளை இயற்றும் அதிகாரத்தினை எந்த சட்டப்பிரிவின் கீழ் பெறுகிறது?

(A) பிரிவு - 18 (B) பிரிவு - 19

(C) பிரிவு - 20 (D) பிரிவு - 21

26. According to Tamilnadu Agricultural Land Record of Tenancy Rights Act 1969, which section says that a Record Officer has power to inspect the approved record and the same can be served to all person, whoever applies

(A) Section-16 (B) Section-17

(C) Section-18 (D) Section-19

தமிழ்நாடு வேளாண் நிலங்கள் குத்தகை உரிமைகள் பதிவுரு சட்டம் - 1969ன் படி எந்த சட்டப்பிரிவின் கீழ் பதிவுறு அலுவலர் அங்கீகரிக்கப்பட்ட பதிவுறுகளை ஆய்வு செய்யவும் பின்னர் அதனைப் பெற விண்ணப்பித்த அனைவருக்கும் வழங்கும் அதிகாரம் பெறுகிறார்

(A) பிரிவு - 16 (B) பிரிவு - 17

(C) பிரிவு - 18 (D) பிரிவு - 19

27. Under which section the term "cultivation" defines in Tamilnadu Cultivation Tenants Protection Act 1955

(A) Section- 2(bb) (B) Section- 2(aa)

(C) Section- 2(b) (D) Section- 2(c)

தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் பாதுகாப்புச்சட்டம் 1955-ன் படி "பயிரிடுதல்" என்ற சொல்லை எந்தச் சட்டப்பிரிவு வரையறை செய்கிறது?

(A) பிரிவு- 2(bb) (B) பிரிவு - 2(aa)

(C) பிரிவு - 2(b) (D) பிரிவு - 2(c)

28. The term of the office of the Advisory Committee in Tamilnadu Agricultural Land Record of Tenancy Rights Act 1969 is

(A) 3 years (B) 1 year

(C) 5 years (D) 6 years

தமிழ்நாடு வேளாண் நிலங்கள் குத்தகை உரிமைகள் பதிவுரு சட்டம் - 1969-ன் படி ஆலோசனைக்குழுவின் பதவிக்காலம் எவ்வளவு?

(A) 3 வருடங்கள் (B) 1 வருடம்

(C) 5 வருடங்கள் (D) 6 வருடங்கள்

29. In the Tamilnadu Agricultural Land Record of Tenancy Rights Act 1969, the Advisory Committee comes under section

(A) Section-5 (B) Section-5A

(C) Section-6 (D) Section-7

தமிழ்நாடு வேளாண் நிலங்கள் குத்தகை உரிமைகள் பதிவுரு சட்டம் - 1969-ன் படி ஆலோசனைக்குழு எந்த சட்டப்பிரிவின் கீழ் வருகிறது?

(A) பிரிவு - 5 (B) பிரிவு - 5A

(C) பிரிவு - 6 (D) பிரிவு - 7

30. Under Tamilnadu Agricultural Land Record of Tenancy Rights Act 1969, which section says, that the power of the record Officer to take *Suo Motto* action

(A) Section-5 (B) Section-5A

(C) Section-4 (D) Section-4A

தமிழ்நாடு வேளாண் நிலங்கள் குத்தகை உரிமைகள் பதிவுரு சட்டம் - 1969-ன் எந்தப் பிரிவின் கீழ் பதிவுரு அலுவலர் தாமே சுயமாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் பெறுகிறார்?

(A) பிரிவு - 5 (B) பிரிவு - 5A

(C) பிரிவு - 4 (D) பிரிவு - 4A

31. Who has the power to modify the entries in the approved record of tenancy rights?

(A) Record Officer (B) Village Officer

(C) District Court (D) District Collector

ஒரு அங்கீகரிக்கப்பட்ட குத்தகை உரிமைகள் பதிவுருவின் பதிவுகளை மாற்றம் செய்யும் அதிகாரம் யாருக்கு உள்ளது

(A) பதிவுரு அலுவலர் (B) கிராம நிர்வாக அலுவலர்

(C) மாவட்டம் நீதிமன்றம் (D) மாவட்ட ஆட்சியர்

32. Under which section, of Tamilnadu Agricultural Land Record of Tenancy Rights Act 1969, the Record officer shall modify the entries in the approved record of tenancy rights

(A) Section-5
(B) Section-5A
(C) Section-4
(D) Section-4A

தமிழ்நாடு வேளாண் நிலங்கள் குத்தகை உரிமைகள் பதிவுரு சட்டம் 1969ன் எந்த சட்டப்பிரிவு பதிவுறு அலுவலர் அங்கீகாரம் செய்யப்பட்ட குத்தகை உரிமைப்பதிவுகளை மாற்றுவது பற்றி குறிப்பிடுகிறது

(A) பிரிவு - 5
(B) பிரிவு - 5A
(C) பிரிவு - 4
(D) பிரிவு - 4A

33. According to Tamilnadu Public Trust Act 1961, who has the power to issue order and direction to the authorized officer and the Registrar

(A) Government
(B) Governor
(C) Rent Tribunal
(D) Collector

தமிழ்நாடு பொது பொறுப்புரிமைச் சட்டம் 1961-ன் கீழ் கீழ்கண்ட யாருக்கு அதிகாரம் பெற்ற அலுவலர் மற்றும் பதிவாளருக்கு உத்தரவும் அறிவுரைகளையும் வழங்கும் அதிகாரம் உள்ளது?

(A) தமிழக அரசு
(B) ஆளுநர்
(C) குத்தகைத்தீர்ப்பாயம்
(D) ஆட்சியர்

34. All Rules and orders issued shall be published under Tamilnadu Public Trust Act 1961 is

(A) Tamilnadu Government Gazette
(B) Affixing on the walls of the Collector office
(C) District gazette
(D) Daily Newspaper

தமிழ்நாடு பொது பொறுப்புரிமை அமைப்புச்சட்டம் - 1961ன் படி எல்லா விதிமுறைகளையும் உத்தரவுகளையும் கீழ்கண்ட எதில் வெளியிட வேண்டும்?

(A) தமிழக அரசிதழ்
(B) ஆட்சியரின் அலுவலகத்தின் சுவர்களில் ஒட்டுதல்
(C) மாவட்ட அரசிதழ்
(D) தினசரி நாளிதழ்

35. The term 'Sub-Tenant' comes under section in Tamilnadu Agricultural Land Record of Tenancy Rights Act 1969 is

(A) sec 2(8)(i)
(B) sec 2(8)(ii)(d)
(C) sec 2(8)(ii)
(D) sec 2(8)(ii)(c)

தமிழ்நாடு வேளாண் நிலங்கள் குத்தகை உரிமைகள் பதிவுரு சட்டம் - 1969ல் "கீழ்க்குத்தகைதாரர்" என்ற சொல் எந்த சட்டத்தின் கீழ் வருகிறது

(A) பிரிவு - 2(8)(i)
(B) பிரிவு - 2(8)(ii)(d)
(C) பிரிவு - 2(8)(ii)
(D) பிரிவு - 2(8)(ii)(c)

36. The term 'Village' comes under section in Tamilnadu Agricultural Land Record of Tenancy Rights Act 1969

(A) sec 2(9) (B) sec 2(8)

(C) sec 2(6) (D) sec 2(5)

தமிழ்நாடு வேளாண் நிலங்கள் குத்தகை உரிமைகள் பதிவுரு சட்டம் - 1969 "கிராமம்" என்ற சொல் எந்த சட்டப்பிரிவின் கீழ் வருகிறது

(A) பிரிவு 2(9) (B) பிரிவு 2(8)

(C) பிரிவு 2(6) (D) பிரிவு 2(5)

37. A Local area which is designed as village in revenue accounts is termed as

(A) Village (B) Panchayat

(C) Unit (D) Municipality

ஒரு ஊராட்சிப்பகுதி வருவாய்க்கணக்கில் கிராமமாக வடிவமைக்கப்படும்போது எவ்வாறு அழைக்கலாம்?

(A) கிராமம் (B) ஊராட்சி

(C) அலகு (D) நகராட்சி

38. What does the section 6B of Tamilnadu Cultivating Tenants Protection Act 1955 states?

(A) Revision by High Court

(B) Power to make Rules

(C) Execution of Lease

(D) Bar of jurisdiction of civil courts

தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் பாதுகாப்பு சட்டம் - 1955-ன் சட்டப்பிரிவு 6-B எதைப்பற்றி குறிப்பிடுகிறது

(A) உயர்நீதிமன்றத்தின் சீராய்வு

(B) விதிகளை இயற்றும் அதிகாரம்

(C) குத்தகை ஒப்பந்தம் நிறைவேற்றம்

(D) உரிமையியல் நீதிமன்றங்களின் ஆல்வரைக்குத்தடை

39. Under which section, of Tamilnadu Cultivation Tenants Protection Act 1955, the Right to Restoration of possession deals

(A) Section-4 (B) Section-4A

(C) Section-4AA (D) Section -4B

தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் பாதுகாப்பு சட்டம் 1955-ன் எந்தப்பிரிவு சுவாதீனத்தை திரும்பப் பெரும் உரிமை பற்றி குறிப்பிடுகிறது

(A) பிரிவு - 4 (B) பிரிவு - 4A

(C) பிரிவு - 4AA (D) பிரிவு - 4B

40. Under which section, the term 'Garden Land' defines in Tamilnadu Cultivation Tenants Protection Act 1955

(A) Sec — 2(b)
(B) Sec — 2(bb)
(C) Sec — 2(c)
(D) Sec — 2(d)

தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் பாதுகாப்பு சட்டம் 1955-ன் எந்தப்பிரிவில் "தோட்டநிலம்" பற்றி வரையறுக்கிறது

(A) பிரிவு — 2(b)
(B) பிரிவு — 2(bb)
(C) பிரிவு — 2(c)
(D) பிரிவு — 2(d)

41. Under which section ,Revenue Divisional officer defines in TamilNadu Cultivating Tenants Protection Act 1955

(A) Sec – 2(f)
(B) Sec – 2(e)
(C) Sec – 2(g)
(D) Sec – 2(d)

தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் பாதுகாப்பு சட்டம் – 1955–ன் எந்த சட்டப்பரிவு கோட்டாட்சியரை வரையறை செய்கிறது

(A) பரிவு – 2 (f)
(B) பரிவு – 2 (e)
(C) பரிவு – 2 (g)
(D) பரிவு – 2 (d)

42. A Cultivating tenant has no right to alienate his lease hold rights to

(A) Land owner
(B) Cultivating Tenant's family members
(C) Third Party
(D) Lessee

ஒரு பயிரிடும் குத்தகைதாரருக்கு கீழ்கண்ட யாருக்கு தன்னுடைய குத்தகை உரிமையை மாற்றாக்கம் செய்யும் உரிமை கிடையாது?

(A) நில உடைமையாளர்
(B) பயிரிடும் குத்தகைதாரரின் குடும்ப உறுப்பினர்கள்
(C) மூன்றாம் நபர்
(D) குத்தகை பெற்றவர்

43. In Tamilnadu Cultivating Tenants Protection Act 1955, sec-6-A deals with

(A) Revision by High Court
(B) Transfer of certain suits to the Revenue Divisional Officer by civil courts
(C) Power to make Rules
(D) Right to Restoration of Possession

தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் பாதுகாப்பு சட்டம் – 1955–ன் சட்டப்பிரிவு 6—A எதைப்பற்றி குறிப்பிடுகிறது.

(A) உயர்நீதி மன்றத்தின் சீராய்வு
(B) உரிமையியல் நீதி மன்றத்தால் கோட்டாட்சியருக்கு சில வழக்குகளை மாற்றுதல்
(C) விதிகளை இயற்றும் அதிகாரம்
(D) சுவாதீனம் திரும்ப பெறும் உரிமை

44. The Penalties and procedures of TamilNadu Public Trust Act 1961 is dealt under

(A) Section – 46 to 49
(B) Section – 46, 49
(C) Section – 46 to 50
(D) Section – 48 to 50

தமிழ்நாடு பொது பொறுப்புரிமை சட்டம் – 1961–ன் எந்த சட்டப்பிரிவுகள் தண்டணை நடைமுறைகளைப் பற்றி குறிப்பிடுகிறது?

(A) பிரிவு – 46 முதல் 49 வரை
(B) பிரிவு – 46, 49 வரை
(C) பிரிவு – 46 முதல் 50 வரை
(D) பிரிவு – 48 முதல் 50 வரை

45. Under which section in Tamilnadu Cultivating Tenants Protection Act 1955, 'execution of lease' is dealt

(A) Section – 3
(B) Section – 4A
(C) Section – 4B
(D) Section – 4AA

தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் பாதுகாப்பு சட்டம் – 1955 –ன் சட்டத்தின் படி எந்த சட்டப்பிரிவு குத்தகை நிறைவேற்றம் பற்றி குறிப்பிடுகிறது

(A) பிரிவு – 3
(B) பிரிவு – 4A
(C) பிரிவு – 4B
(D) பிரிவு – 4AA

46. Under TamilNadu Cultivating Tenants Protection Act 1955, who the power to transfer the application or other proceeding from one R.D.O. to other R.D.O in the same district

(A) The District Collector
(B) Tahsildar
(C) High court
(D) Civil court

தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் பாதுகாப்பு சட்டம்–1955–ன் கீழ், கீழ்கண்டயாருக்கு ஒரு கோட்டாட்சியரிடமிருந்து அதே மாவட்டத்தில் உள்ள மற்றொரு கோட்டாட்சியருக்கு விண்ணப்பம் அல்லது பிற நடவடிக்கைகளை மாற்றம் செய்யும் அதிகாரம் உள்ளது

(A) மாவட்ட ஆட்சியர்
(B) வட்டாச்சியர்
(C) உயர்நீதிமன்றம்
(D) உரிமையியல் நீதிமன்றம்

47. Who gets the special privileges under the act of Tamilnadu Cultivating Tenants Protection Act 1955?

(A) Land Owner
(B) Sc/St's
(C) Armed Forces
(D) Cultivating tenant

தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் பாதுகாப்பு சட்டம் – 1955–ன் படி யார் சிறப்புரிமைகள் பெறுகின்றனர்

(A) நில உரிமையாளர்
(B) பட்டியல் வகுப்பினர் /மலைவாழ் பழங்குடியினர்
(C) ராணுவத்தினர்
(D) பயிரிடும் குத்தகைதாரர்

48. The Order passed by the Government under the Tamilnadu Estates (Abolition and Conversion into Ryotwari) Act 1948 is dealt with section

(A) Section-64 (B) Section-64A

(C) Section-64B (D) Section-64C

தமிழ்நாடு எஸ்டேட் (ஒழிப்பு மற்றும் ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் – 1948ன் படி அரசால் பிறப்பிக்கப்படும் முடிவு பற்றி எந்த சட்டப் பிரிவு குறிப்பிடுகிறது

(A) பிரிவு – 64 (B) பிரிவு – 64A

(C) பிரிவு – 64B (D) பிரிவு – 64C

49. Whose order shall be deemed as final in Tamilnadu Estates (Abolition and Conversion into Ryotwari) Act 1948

(A) Tribunal (B) Civil Court

(C) Government (D) District Court

தமிழ்நாடு எஸ்டேட் (ஒழிப்பு மற்றும் ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் – 1948ன் படி யாருடைய முடிவு இறுதியானது

(A) தீர்ப்பாயம் (B) உரிமையியல் நீதிமன்றம்

(C) அரசு (D) மாவட்ட நீதிபதி

50. What does the section- 21 deals in Tamilnadu Estates (Abolition and Conversion into Ryotwari) Act 1948

(A) Survey of estates (B) Rent

(C) Function of the settlement officers (D) Function of Tribunal

தமிழ்நாடு எஸ்டேட் (ஒழிப்பு மற்றும் ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் – 1948ன் சட்டப்பிரிவு 21 எதைப்பற்றி கூறுகிறது?

(A) எஸ்டேட்களை நில அளவை செய்தல் (B) குத்தகை

(C) நிலவரித்திட்ட அலுவலரின் செயல்பாடுகள் (D) தீர்ப்பாயத்தின் செயல்பாடுகள்

51. Which Land does the tenant have his possession is set to be illegal under Tamilnadu Estates (Abolition and Conversion into Ryotwari) Act 1948?

(A) Oorani (B) Porampokku

(C) Kudiwaram (D) Melwaram

தமிழ்நாடு நிலம் (ஒழிப்பு மற்றும் ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் – 1948ன் படி கீழ் கண்ட எந்த நிலத்தினை தன்னுடைய சுவாதீனத்தில் வைத்திருத்தல் சட்டத்திற்கு புறம்பானது?

(A) ஊரணி (B) புறம்போக்கு

(C) குடிவாரம் (D) மேல்வாரம்

52. Under which section of Tamilnadu Cultivating Tenants(Payment of Fair Rent) act 1956, says the Rights and liabilities of the cultivating tenant

(A) Section-3 (B) Section-4

(C) Section-4A (D) Section-5

தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் (நியாயக் குத்தகை செலுத்துதல்) சட்டம் – 1956 ன் படி எந்தச்சட்டப்பிரிவு பயிரிடும் குத்தகைதாரரின் உரிமைகள் மற்றும் பொறுப்புகளைப் பற்றி குறிப்பிடுகிறது?

(A) பிரிவு – 3 (B) பிரிவு – 4

(C) பிரிவு – 4A (D) பிரிவு – 5

53. Under the act of Tamilnadu Cultivating Tenants Protection Act 1955, an order for eviction is set as side in revision by High court and shall direct to restoration of possession ?

(A) Section-6B (B) Section-6BB

(C) Section-6C (D) Section-6A

தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் பாதுகாப்பு சட்டம் – 1955–ன் படி ஒரு வெளியேற்ற உத்தரவு உயர்நீதிமன்ற சீராய்வினால் தள்ளுபடி செய்யப்பட்டு திரும்ப சுவாதீனத்தை பெறுவது பற்றி எந்த சட்டப்பிரிவு கூறுகிறது?

(A) பிரிவு – 6B (B) பிரிவு – 6BB

(C) பிரிவு – 6C (D) பிரிவு – 6A

54. Under the TamilNadu Cultivating Tenants (Payment of Fair Rent) Act 1956, which section explain what is Fair Rent?

(A) Section-3 (B) Section-4

(C) Section-4A (D) Section-5

தமிழ்நாடு பயிரிடும் குத்தகைகாரர் (நியாயக்குத்தகை செலுத்துதல்) சட்டம் – 1956–ன் எந்த சட்டப்பிரிவு நியாயக்குத்தகை என்றால் என்ன? என விவரிக்கிறது?

(A) பிரிவு – 3 (B) பிரிவு – 4

(C) பிரிவு – 4A (D) பிரிவு – 5

55. Under the Tamilnadu Cultivating Tenants(Payment of Fair Rent) act 1956, which section deals the appeal to rent tribunal

(A) Section-9 (B) Section-10

(C) Section-11 (D) Section-12

தமிழ்நாடு பயிரிடும் குத்தகைகாரர் (நியாயக்குத்தகை செலுத்துதல்) சட்டம்–1956–ன் எந்த சட்டப்பிரிவு தீர்ப்பாயத்திற்கு மேல்முறையீடு செய்வதைப் பற்றி குறிப்பிடுகிறது

(A) பிரிவு – 9 (B) பிரிவு – 10

(C) பிரிவு – 11 (D) பிரிவு – 12

56. Under the TamilNadu Cultivating Tenants(Payment of Fair Rent) act 1956, the cultivating tenant can apply to the rent court for fixation of fair rent is dealt under section?

(A) Section-9
(B) Section-10
(C) Section-11
(D) Section-12

தமிழ்நாடு பயிரிடும் குத்தகைகாரர் (நியாயக்குத்தகை செலுத்துதல்) சட்டம் – 1956–ன் எந்த பிரிவின் கீழ் பயிரிடும் குத்தகைதாரர் நியாயக் குத்தகையை முடிவு செய்ய வருவாய் நீதிமன்றத்தில் மறு தாக்கல் செய்ய முடியும்

(A) பிரிவு – 9
(B) பிரிவு – 10
(C) பிரிவு – 11
(D) பிரிவு – 12

57. The Rent Tribunal is sub-ordinate to the court of High Court is dealt under section

(A) Section-11 of Tamilnadu Cultivating Tenants(Payment of Fair Rent) act 1956
(B) Section-115 of Civil Procedure Code(Central Act V of 1908)
(C) Section-123 of Civil Procedure Code(Central Act V of 1908)
(D) Section-12 of Tamilnadu Cultivating Tenants(Payment of Fair Rent) act 1956

கீழ்கண்ட சட்டத்தில் எந்த பிரிவு தீர்ப்பாயமானது உயர்நீதிமன்றத்தின் சார்நிலை நீதிமன்றம் எனக் கூறுகிறது?

(A) தமிழ்நாடு பயிரிடும் குத்தகைகாரர் (நியாயக்குத்தகை செலுத்துதல்) சட்டம்–1956–பிரிவு 11
(B) உரிமையியல் நடைமுறைத் தொகுப்பு (மத்திய சட்டம் V) 1908–ன் பிரிவு – 115
(C) உரிமையியல் நடைமுறைத் தொகுப்பு (மத்திய சட்டம் V) 1908–ன் பிரிவு – 123
(D) தமிழ்நாடு பயிரிடும் குத்தகைகாரர் (நியாயக்குத்தகை செலுத்துதல்) சட்டம் –1956–பிரிவு–12

58. As per the Tamilnadu Cultivating Tenants(Payment of Fair Rent) act 1956, the Rent Tribunal order shall be liable to revision by the High court, under the provision of

(A) Section-11
(B) Section-12
(C) Section-13
(D) Section-14

தமிழ்நாடு பயிரிடும் குத்தகைகாரர் (நியாயக்குத்தகை செலுத்துதல்) சட்டம் 1956–ன்படி எந்தச் சட்டப்பிரிவு தீர்ப்பாயத்தின் உத்தரவானது சீராய்வு செய்யப்படக்கூடியது என குறிப்பிடுகிறது?

(A) பிரிவு – 11
(B) பிரிவு – 12
(C) பிரிவு – 13
(D) பிரிவு – 14

59. As per the Tamilnadu Cultivating Tenants(Payment of Fair Rent) act 1956, the term 'Agricultural Year' is dealt under section

(A) Section-2(a)
(B) Section-2
(C) Section-2(aa)
(D) Section-2(b)

தமிழ்நாடு பயிரிடும் குத்தகைகாரர் (நியாயக்குத்தகை செலுத்துதல்) சட்டம்–1956–ன்படி "வேளாண் ஆண்டு" என்ற சொல்லை எந்த சட்டப்பிரிவு வரையறுக்கிறது?

(A) பிரிவு -2(a)
(B) பிரிவு–2
(C) பிரிவு -2(aa)
(D) பிரிவு–2(b)

60. As per the Tamilnadu Cultivating Tenants(Payment of Fair Rent) act 1956, the term 'Fair Rent' is dealt under section

(A) Section-2(a) (B) Section-2(b)

(C) Section-2(c) (D) Section-2(d)

தமிழ்நாடு பயிரிடும் குத்தகைகாரர் (நியாயக்குத்தகை செலுத்துதல்) சட்டம்–1956–ன் படி சட்டப்பிரிவு "நியாயக்குத்தகை" என்ற சொல்லை குறிப்பிடுகிறது?

(A) பிரிவு -2(a) (B) பிரிவு -2(b)

(C) பிரிவு -2(c) (D) பிரிவு -2(d)

61. As per the TamilNadu Cultivating Tenants (Payment of Fair Rent) act 1956, the term 'paid' is dealt under section

(A) Section-2(f) (B) Section-2(g)

(C) Section-2(h) (D) Section-2(i)

தமிழ்நாடு பயிரிடும் குத்தகைகாரர் (நியாயக்குத்தகை செலுத்துதல்) சட்டம்–1956–ன் படி எந்தச் சட்டப்பிரிவு "செலுத்தப்பட்டது" என்ற சொல்லை குறிப்பிடுகிறது?

(A) பிரிவு -2(f) (B) பிரிவு 2(g)

(C) பிரிவு -2(h) (D) பிரிவு -2(i)

62. In which year the Tamilnadu Cultivating Tenants Payment of Fair Rent (Extension to Kanyakumari District) Act 1956, published in Tamilnadu Government Gazette?

(A) 1963 (B) 1972

(C) 1961 (D) 1969

கீழ்கண்ட எந்த வருடத்தில் தமிழ்நாடு பயிரிடும் குத்தகைகாரர் நியாயக்குத்தகை செலுத்துதல் (கன்னியாகுமரி மாவட்டத்திற்கு விரிவுபடுத்துதல்) சட்டம் 1956, தமிழக அரசிழில் வெளியிடப்பட்டது?

(A) 1963 (B) 1972

(C) 1961 (D) 1969

63. On which date the Tamilnadu Cultivating Tenants(Payment of Fair Rent) act 1956 came to force in Shenkottah taluk of Tirunelveli district

(A) 1st March 1960 (B) 2nd March 1960

(C) 26th March 1960 (D) 18th March 1960

கீழ்கண்ட எந்த தேதியில் தமிழ்நாடு பயிரிடும் குத்தகைகாரர் (நியாயக்குத்தகை செலுத்துதல்) சட்டம் 1956 திருநெல்வேலி மாவட்டம் உள்ள செங்கோட்டை தாலுக்காவிற்கு நடைமுறைக்கு வந்தது?

(A) 1 மார்ச் 1960 (B) 2 மார்ச் 1960

(C) 26 மார்ச் 1960 (D) 18 மார்ச் 1960

64. Power of the Government to issue order and direction to the authorised officer and the Registrar is deals under section in TamilNadu Public Trust Act 1961 is

(A) Section-54 (B) Section-55

(C) Section-56 (D) Section-57

தமிழ்நாடு பொது பொறுப்புரிமை சட்டம்–1961–ன் படி எந்த சட்டப்பிரிவு அதிகாரம் பெற்ற அலுவலர் மற்றும் பதிவாளருக்கு உத்தரவும் அறிவுறைகளையும் வழங்க அரசுக்கு அதிகாரம் வழங்குகிறது?

(A) பிரிவு-54 (B) பிரிவு -55

(C) பிரிவு -56 (D) பிரிவு -57

65. The term 'Cultivating Tenant' includes in TamilNadu Cultivating Tenants (Payment of Fair Rent) Act 1956 is

(A) Intermediary (B) Tenant

(C) Sub-Tenant (D) Land owner

தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் (நியாயக்குத்தகை செலுத்துதுல்) சட்டம் –1956–ன்படி பயிரிடும் குத்தகைதாரர் என்பதில் கீழ்கண்டவரையும் உள்ளடக்கும்?

(A) இடைப்பட்டவர் (B) குத்தகைதாரர்

(C) கீழ்க்குத்தகைதாரர் (D) நில உடமையாளர்

66. On which data the Rights and Liabilities of Cultivating tenant and Land owner, came to effect

(A) 2nd March 1972 (B) 1st October 1956

(C) 2nd October 1956 (D) 31th December 1956

கீழ்கண்ட எந்த தேதியில் பயிரிடும் குத்தகைதாரர் மற்றும் நில உடைமையாளரின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் நடைமுறைக்கு வந்தது?

(A) 2 மார்ச் 1972 (B) 1 அக்டோபர் 1956

(C) 2 அக்டோபர் 1956 (D) 31 டிசம்பர் 1956

67. As per the TamilNadu Cultivating Tenants (Payment of Fair Rent) Act 1956, which month is called is 'Agricultural Year'

(A) 1st day of April (B) 1st day of January

(C) 1st day of October (D) 1st day of December

தமிழ்நாடு பயிரிடும் குத்தகைகாரர் (நியாயக்குத்தகை செலுத்துதல்) சட்டம்–1956 –ன்படி எந்த மாதம் "வேளாண் ஆண்டு" அழைக்கப்படுகிறது?

(A) 1st day of ஏப்ரல் (B) 1st day of ஜனவரி

(C) 1st day of அக்டோபர் (D) 1st day of டிசம்பர்

68. As per the TamilNadu Cultivating Tenants (Payments of Fair Rent) Act 1956, the term 'paid' includes

(A) Cost  (B) Value

(C) Delivered  (D) Product

தமிழ்நாடு பயிரிடும் குத்தகைகாரர் (நியாயக்குத்தகை செலுத்துதல்) சட்டம்–1956–ன் படி "செலுத்துப்பட்டது" எந்த சொற்றொடரில் கீழ்கண்டவையும் உள்ளடங்கும்

(A) செலவுத்தொகை  (B) மதிப்பு

(C) ஒப்படைத்தல்  (D) விளைபொருள்

69. Under which section the Rent Court and Rent Tribunal comes in TamilNadu Cultivating Tenants(payment of Fair Rent) act 1956

(A) Section-2(i)  (B) Section-8

(C) Section-9  (D) Section-10

தமிழ்நாடு பயிரிடும் குத்தகைகாரர் (நியாயக்குத்தகை செலுத்துதல்) சட்டம்–1956–ன் எந்த சட்டப்பிரிவின் கீழ் குத்தகை நீதிமன்றம் மற்றும் தீர்ப்பாயம் வருகின்றது

(A) பிரிவு-2(i)  (B) பிரிவு -8

(C) பிரிவு -9  (D) பிரிவு -10

70. Under what section of Tamilnadu Public Trust Act 1961, an authorized Officer has a special power to take *Suo Motto* action

(A) Section-14  (B) Section-14A

(C) Section-15  (D) Section-15A

தமிழ்நாடு பொது பொறுப்புரிமை சட்டம்–1961–ன் படி எந்த சட்டப்பிரிவின் கீழ் அதிகாரம் பெற்ற அலுவலர் தாமகவே நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் பெறுகிறார்?

(A) பிரிவு -14  (B) பிரிவு -14A

(C) பிரிவு -15  (D) பிரிவு -15A

71. Under what section of Tamilnadu Public Trust Act 1961, Trustee or authorized Officer has to take Possession of Land Acquistion Act 1984nd reverting to public trust is

(A) Section-14  (B) Section-14A

(C) Section-15  (D) Section-15A

தமிழ்நாடு பொது பொறுப்புரிமை சட்டம்–1961–ன் எந்த சட்டப்பிரிவு அறங்காவலர் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலர் சுவாதீனம் பெற்ற நிலத்தை பொது பொறுப்புரிமை 1984 அமைப்புக்கு பின்னடைவு செய்வதைக் குறிப்பிடுகிறது?

(A) பிரிவு -14  (B) பிரிவு -14A

(C) பிரிவு -15  (D) பிரிவு -15A

72. As per the Tamilnadu Public Trust Act 1961 , on the basis of section-9 or 10, the returns can be furnished to authorized officer is dealt under section

(A) Section-11 (B) Section-12

(C) Section-13 (D) Section-14

தமிழ்நாடு பொது பொறுப்புரிமை சட்டம் – 1961–ன் படி சட்ட வாசகங்கள் 9அல்லது 10 அடிப்படையில் அதிகாரம் பெற்ற அலுவலர்க்கு விவர அறிக்கை அளித்தவைப் பற்றி எந்த சட்டப்பிரிவு குறிப்பிடுகிறது?

(A) பிரிவு -11 (B) பிரிவு -12

(C) பிரிவு -13 (D) பிரிவு -14

73. Under the TamilNadu Public Trust Act 1961, the authorized officer can take action in certain cases

(A) Section-12 (B) Section-13

(C) Section-14 (D) Section-15

தமிழ்நாடு பொது பொறுப்புரிமை சட்டம் – 1961–ன் படி நடவடிக்கை எடுக்க முடியும் சிலவற்றை பற்றி எந்த சட்டப்பிரிவு கூறுகிறது?

(A) பிரிவு -12 (B) பிரிவு -13

(C) பிரிவு -14 (D) பிரிவு -15

74. As per the TamilNadu Public Trust Act 1961, who has the power to take revision

(A) High court (B) Civil Court

(C) District Court (D) Sub-Ordinate Court

தமிழ்நாடு பொது பொறுப்புரிமை சட்டம் – 1961–ன் படி யாருக்கு மேலாய்வு செய்யும் அதிகாரம் உள்ளது?

(A) உயர்நீதிமன்றம் (B) உரிமையியல் நீதிமன்றம்

(C) மாவட்ட நீதிமன்றம் (D) சார்பு நீதிமன்றம்

75. As per the TamilNadu Public Trust Act 1961, District Court has the power to take revision under section

(A) Section–21 (B) Section–22

(C) Section–23 (D) Section–24

தமிழ்நாடு பொது பொறுப்புரிமை சட்டம் – 1961–ன் படி எந்த சட்டப் பிரிவின் படி மாவட்ட நீதிமன்றம் மேலாய்வு செய்யும் அதிகாரம் பெறுகிறது

(A) பிரிவு -21 (B) பிரிவு -22

(C) பிரிவு -23 (D) பிரிவு -24

76. As per the TamilNadu Public Trust Act 1961, the Lease can be executed under section

(A) Section–21 (B) Section–22

(C) Section–23 (D) Section–24

தமிழ்நாடு பொது பொறுப்புரிமை சட்டம் – 1961–ன் படி எந்த பிரிவின் கீழ் குத்தகை ஒப்பந்தம் நிறைவேற்ற முடியும்?

(A) பிரிவு -21 (B) பிரிவு -22

(C) பிரிவு -23 (D) பிரிவு -24

77. What does the section-23 of TamilNadu Public Trust Act 1961 is says?
(A) Fair Rent
(B) Rights and Liabilities of the cultivating tenant and Public Trust
(C) Functions of Public Trust
(D) What is Fair Rent

தமிழ்நாடு பொது பொறுப்புரிமை சட்டம் – 1961–ன் படி சட்டப்பிரிவு 23 எதைப்பற்றி கூறுகிறது?
(A) நியாயக்குத்தகை
(B) பயிரிடும் குத்தகைதாரர் மற்றும் பொதுப்பொறுப்புரிமை அமைப்பின் உரிமைகளும் பொறுப்புகளும்
(C) பொதுப்பொறுப்புரிமை அமைப்பின் செயல்பாடுகள்
(D) நியாயக் குத்தகை என்றால் என்ன?

78. What does the section-47A of Tamil Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act 1963 says
(A) Tribunal or other authority not to appoint receiver
(B) Power to make Rules
(C) Repealed
(D) Limitation

தமிழ்நாடு சிறு இனாம் (ஒழிப்பு மற்றும் ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் – 1963–ன்படி சட்டப்பிரிவு 47(A) எதைப் பற்றி கூறுகிறது?
(A) தீர்ப்பாயம் அல்லது பிற அதிகாரக்குழு காப்பாளரை நியமிக்க முடியாது
(B) விதிகள் இயற்றும் அதிகாரம்
(C) நீக்கறவு
(D) காலவரையறை

79. As per Tamil Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act 1963, the payments can be deposited in the office of
(A) District Court
(B) The Tribunal
(C) Taluk Office
(D) Collector Office

தமிழ்நாடு சிறு இனாம் (ஒழிப்பு மற்றும் ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் – 1963–ன்படி எந்த அலுவலகத்தில் வைப்பீடு செலுத்த முடியும்.
(A) மாவட்ட நீதிமன்றம்
(B) தீர்ப்பாயம்
(C) தாலுக்கா அலுவலகம்
(D) ஆட்சியர் அலுவலகம்

80. According to TamilNadu Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act 1963, the Government shall deposit all such amounts in the office of
(A) The Tribunal
(B) The Board of Revenue
(C) Civil Court
(D) Taluk Office

தமிழ்நாடு சிறு இனாம் (ஒழிப்பு மற்றும் ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் – 1963–ன்படி அரசு எல்லா வகையான வைப்பீடுகளையும் கீழ்கண்ட எந்த அலுவலகத்தில் செலுத்த வேண்டும்?
(A) தீர்ப்பாயம்
(B) வருவாய் வாரியம்
(C) உரிமையியல் நீதிமன்றம்
(D) தாலுக்கா அலுவலகம்

**063/DD/18**

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

## DEPARTMENTAL EXAMINATIONS

## DEPARTMENTAL TEST ON LAND LAWS AND OTHER RELIGIOUS ACTS FOR HINDU RELIGIOUS AND CHARITABLE ENDOWMENTS DEPARTMENT

(With Books)

Maximum Time : 30 minutes

Maximum Marks : 20

### *IMPORTANT INSTRUCTIONS*

### DESCRIPTIVE TYPE

விரிவான விடையளிக்கும் வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

**NB : Words of masculine gender in these instructions shall, where the context so require, be taken to include feminine gender.**

இந்த அறிவுறுத்தலில் ஆண் பாலினரின் வார்த்தைகளில், சூழலுக்கேற்ப தேவைப்படின் பெண் பாலினரின் வார்த்தைகளும் அடங்கும்.

1. Answers in excess of the prescribed number of questions appearing at the end of the answer book will not be valued.

   விடைகளை குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைக்கு அதிகமாக எழுதியிருப்பின், விடைத்தாளின் இறுதியில் உள்ள அதிக எண்ணிக்கையிலான விடைகள் மதிப்பீடு செய்யப்படாது.

2. Answer should be in brief and to the point and need not be a verbatim reproduction of printed pages. (Applicable for tests to be answered "with books" only).

   விடைகள் சுருக்கமாகவும், வினாவிற்கு உரிய அளவிலும் இருக்க வேண்டும். புத்தகத்தில் உள்ளவற்றை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை திரும்ப எழுதக் கூடாது. (இக்குறிப்பு புத்தகங்களுடன் எழுதும் தேர்விற்கு மட்டும் பொருந்தும்)

3. In case of doubt, English version is the final.

   வினாக்களில் சந்தேகமிருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

[Turn over

**Answer any FOUR questions.**

எவையேனும் நான்கு கேள்விகளுக்கு விடையளிக்கவும். (4 × 5 = 20)

1. State the positions of the Legitimacy of children of void and voidable marriages.

   இல்லாநிலை மற்றும் தவிர் தகுநிலைத் திருமணங்கள் வழித் தோன்றிய குழந்தைகளின் சட்டங்குறித்த நிலையைத் தெரிவிக்க.

2. Explain the Modification of entries in the Patta Pass Book Act 1983.

   பட்டா பதிவுப் புத்தகச்சட்டம் 1983-ன் படி பட்டாப் பதிவு புத்தகத்திலுள்ள பதிவுகளை மாற்றியமைத்தல் பற்றி விவரி.

3. Explain the making of entries of registration of alienation or transfer in Patta Pass Book Act 1983.

   பட்டா பதிவு புத்தகச் சட்டம் 1983-ன் படி பட்டாப் பதிவு புத்தகத்தில் பராதீனமோ உரிமை மாற்றமோ குறித்தப் பதிவுக் குறிப்புகளைச் செய்தல் பற்றி விளக்குக.

4. Define the following expression in Patta Pass Book Act 1983

   (a) Owner

   (b) Limited-Owner

   பட்டாப்பதிவு புத்தகச் சட்டம் 1983-ன் படி கீழ்கண்ட சொற்றொடர்களை வரையறை செய்க.

   (அ) உடைமையாளர்

   (ஆ) வரம்புடைய உடைமையாளர்.

5. (a) Who is 'Record Officer' TN Agricultural land records of tenancy rights act, 1969?

   (b) Who is 'Intermediary' TN Agricultural land records of tenancy rights act, 1969?

   (அ) 'பதிவுரு அலுவலர்' என்பவர் யார்? தமிழ்நாடு வேளாண் நிலங்கள் குத்தகை உரிமைகள் பதிவுரு சட்டம் 1969.

   (ஆ) 'இடையிலிருப்பவர்' யார்? தமிழ்நாடு வேளாண் நிலங்கள் குத்தகை உரிமைகள் பதிவுரு சட்டம் 1969.

6. Explain the Custody of Children under the Hindu Marriage Act 1955.

   இந்து திருமணச்சட்டம் 1955-ன் படி குழந்தைகளின் பாதுகாப்பு பற்றி விளக்குக.

---